புதியம்புத்தூரில் தண்ணீர் தொட்டி.

*280 வினா—திரு. மு. முத்தையா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓட்டப்பிடாரம் ஒன்றியத்தைச் சேர்ந்த புதியம்புத்தூரில் தண்ணீர் தாங்கி கட்டி சாமிநத்தம், நடுவக்குறிச்சி, இராஜாவின் கோயில் ஆகிய கிராமங்களுக்குத் தண்ணீர் பெறச் செய்ய 20-1-1966-ல் மத்திய சர்க்காரால் அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(உ) தாமதமானதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) & (உ) புதியம்புத்தூருக்கும் அதனை அடுத்து அமைந்துள்ள இராஜாவின் கோவில், சாமிநத்தம், நடுவக்குறிச்சி, தில்லாநத்தம் ஆகிய கிராமங்களுக்கும் ஒருங்கிணைந்த நீர் வழங்கு வசதி ரூ. 5.41 லட்சம் செலவு மதிப்பீட்டில் ஏற்படுத்தித்தரும் செயற்குறிப்பு ஏற்பளிக்கப்பட்டது; இதற்கு மத்திய அரசு சுகாதாரப் பணிகள் தலைமை இயக்குநர் 3-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது, தேசிய குடிநீர் வழங்குதல், துப்புரவு திட்டத்தின் கீழ் ஏற்பளித்தார். ஆனால் இப்பணியை நிறைவேற்ற எடுத்துக் கொள்வதற்காக நிதி ஒதுக்குதல் குறித்து, இந்திய அரசு திட்டவட்டமான மறுமொழி எதும் அனுப்பவில்லை. எனவே, 3-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தக் குடிநீர் வழங்கு பணித் திட்டம் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட முடியவில்லை. இருந்த போதிலும், ஏனைய "இடையூறும் பற்றாக் குறையும் உடைய பகுதிகளுக்கான குடிநீர் வழங்கு பணிதிட்டங்களுடன்" சேர்த்து மாநிலத்தின் 4-வது ஐந்தாண்டுத் திட்ட வரைவினுள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக இப்பணித் திட்டம் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே எரல் அருகில் பாலம்.

*281 வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், தாமிரபரணி ஆற்றில் குறுக்கே எரல்—தென்திருப்பேரை பாலத்தைத் திருத்தி அமைத்து போக்குவரத்து வசதி செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நெல்லை மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே, எரல் என்ற இடத்தில் பாலத்தை திருத்தி அமைத்து கட்டுவதற்கு அரசு ரூ. 12 லட்சம் அனுமதி அளித்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, எப்பொழுது அந்த வேலை ஆரம்பிக்கப்படும்? எவ்வளவு காலத்தில் அது முடிவடையும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அரசு அதற்கான ஆணைகளைப் பிறப்பித்து விட்டது சீக்கிரத்தில் வேலை தொடங்கும்.